மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பின்னி சம்பந்தமாகவும் இந்தியா போர்ஜஸ் சம்பந்தமாகவும் கொடுத்த போது அவற்றை அனுமதிக்க முடியாது என்றும் கேள்வி எழுதி கேட்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது சம்பந்தமாக அதில் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லவேண்டும். அண்மையில் சுப்ரீம் கோர்ட் தமிழக அரசிற்கு தொழிற் கோர்ட்டுகளுக்கு வழக்குகள் அனுப்பிவைப்பதிலே ஏற்படக்கூடிய தாமதத்தைக் கண்டித்து அது முறையல்ல, எல்லா வழக்குகளையும் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்று தீர்ப்புக் கூறியதற்குப் பிறகும், 300 வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதி, தமிழக அரசு எடுத்த முடிவு சரியல்ல, அந்த வழக்குகள் எல்லாம் நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று தெரிவித்த முடிவையும் கணக்கில் எடுத்துக்கொண்டு எல்லா வழக்குகளையும் ரெபர் பண்ணக்கூடிய கொள்கை முடிவைக் கடைப்பிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான தகவலை இதிலே அளிக்கவில்லை. நீதிமன்றம் தமிழக அரசைக் கண்டித்ததாகவோ அல்லது அதுபற்றி ஏதாவது ஆப்சர்வேஷன், ஸ்ட்ரிக்ச்சர்ஸ் பாஸ் செய்ததாகவே எனக்குத் தெரிந்தவரையில் தகவல் இல்லை. ஆனால் சில வழக்குகளில் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று பிரத்தியேகமாக சொன்ன நேரத்தில் நீதிமன்றத்தின் கட்டளைக் கிணங்க இந்த அரசு அந்த வழக்குகளையெல்லாம் பரிசீலனை செய்து நீதிமன்றம் சொன்ன அந்தக் கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தெரு விளக்குகள் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியத்திடம் வழங்கல்.

106—(*வினா எண். 7929)—திரு. பாப்பே சுகபரமணியன் மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின்சார வாரியம் ஒப்பந்தப்புள்ளி மூலம் பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை, மீண்டும் ஊராட்சி ஒன்றியத்திடமே வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

1987 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடம் தெருவிளக்குகளைப் பராமரிக்கும் பணி மீண்டும் ஒப்படைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் பல்புகளைப் பொருத்துவதை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைத்தாலும் கூட அந்த பல்புகளைப் பொருத்துவதற்கு மின் வாரியத்தைச் சார்ந்த ஊழியர்களைத் தான் நாட வேண்டியிருக்கிறது. எனவே இதிலே கோவார்டினேஷன் இல்லாத நிலை இருக்கிறது. இதைப் போன்ற நிலை குடிநீர் வடிகால் வாரியத்தில் முதலில் இருந்தது. அரசு எடுத்த நடவடிக்கையினால் அந்த நிலை மாறி நல்ல பலன் கிடைத்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், அதைப்போல கோட்ட வளர்ச்சி அலுவலர் அலுவலகமும் வாட்டர் போர்ட்டிலிருந்து ஊழியர்களை டெபுடேஷனில் பெற்று அவர்களே வேலை வாங்கிக் கொள்கிறார்கள். அதைப்போல மின் வாரியத்திடமிருந்து ஊழியர்களை ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒருவர் என்றும், மாவட்ட அளவிலே ஏ.டி., கேடரில் ஒருவரையும் டெபுடேஷனில் அனுப்பினால் இன்னும் நல்ல பலனுள்ளதாக இருக்கும். மின்வாரியத்திடம் தொடர்பு கொண்டு இப்படி மின் ஊழியர்களை உள்ளாட்சித் துறைக்கு டெபுடேஷனில் பெறுவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, புதிய ஏற்பாட்டின்படி மின் விளக்குகள் சரியாக எரிவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

திரு. வெ. சோ. பஞ்சவர்ணம் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் மின் விளக்குகளை ஒப்படைத்து இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால் தெரு விளக்குகள் மாதக்கணக்கில் எரியாமல் இருக்கின்றன. மின் ஊழியர்களைக் கேட்கிறபோது அவர்கள் தங்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து கொடுக்க வேண்டிய கட்டணத்தையும், பல்புகளையும் கொடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் அளிக்கிறார்கள். தெளிவாக தனித்தன்மையோடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆவன செய்யப்படும்.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, நகராட்சி, மாநகராட்சி போன்றவைகளில் தெரு விளக்குகளைப் பராமரிப்ப தற்காக தனியாக ஹெல்பர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே போல ஊராட்சி ஒன்றியங்களில் தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு தனியாக ஹெல்பர்களை வைத்துக்கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலிருந்து ஊராட்சி ஒன்றியத்திற்கு அந்தப் பொறுப்பை மாற்றிய காரணத்தினால் ஆரம்பத்தில் இருக்கிற சங்கடங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கடங்களை எல்லாம் போக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது.

திரு. எம். அண்ணாதாசன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் மின்விளக்குகளைப் பராமரிப்பது ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பேரூராட்சிகள் வளர்ந்து வருகிற பகுதிகளில் புதியதாக தெரு விளக்குகளை அதாவது 'ட்யூப் பிட்டிங்ஸ்' அமைப்பதற்கு அனுமதி எலக்ட்ரிசிட்டி போர்டிலிருந்து கிடைத்தும்கூட அவற்றை வாங்குவதற்கு அரசு ஒரு குழு அமைத்திருக்கிறது என்றும், அந்தக் குழு எந்த கம்பெனியில் நல்ல தரமான 'ட்யூப் பிட்டிங்க்ஸ்' கிடைக்கிறது என்ற பரிந்துரையை அரசுக்குத் தருகிறதோ, அதைப் பெற்ற பிறகு மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து அதன்பிறகுதான் அவற்றை வாங்க வேண்டுமென்றும் உத்தரவு வந்திருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். அது உண்மையா? அப்படியென்றால் அந்தக் குழுவை உடனடியாக அமைத்து தக்க நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல்லிக்குப்பம் தொகுதி பேரறிஞர் அண்ணா திருமண மண்டபத்தைப் புதுப்பித்தல்.

107. (*வினா எண். 8796)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதி—அண்ணா கிராமம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருமண மண்டபம் திருமணங்கள் நடைபெறும் அளவிற்கு புதுப்பித்துத் தரப்படுமா?